**திருப்பத்தூர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு**

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்; திருப்பத்தூர்

காணாமல்போன குழந்தைகளை மீட்டெடுத்தல் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தொடர்பாக காவல் நிலையங்களில் சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் தேர்வு

***(Selection of Para Legal Volunteers in Police Stations for missing children and other offences against children)***

**Notification No.1/2026** நாள்:- 20.04.2026

மாண்பமை உச்சநீதிமன்ற W.P No. 75/2012 in Bachpan Bachao Andolan Vs Union of India and Others என்ற வழக்கின் வழிகாட்டுதலின்படியும் தமிழக அரசின் G.O/M.S. No.130/2026, நாள்.12.03.2026 படியான உத்தரவின்படியும், மாண்பமை தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் 25.03.2026 தேதியிட்ட உத்தரவு மற்றும் திருப்பத்தூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்படியும் காணாமல் போன குழந்தைகளையும், குழந்தை தொழிலாளர் முறை, கொத்தடிமைத்தனம், குழந்தைகள் கடத்துதல் தொடர்பான குற்றங்களிலிருந்து குழந்தைகளை மீட்டெடுத்து மறுவாழ்வு அளித்து கல்வி கற்பிப்பதன் மூலம் குழந்தை நட்பு சமுதாயத்தை (Child Friendly Society) உருவாக்கும்பொருட்டு திருப்பத்தூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, வாணியம்பாடி வட்ட சட்டப்பணிகள் குழு மற்றும் ஆம்பூர் வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு 30 முதல் 40 வரையிலான சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் (PLVs) தேர்ந்தெடுக்கப்பட உள்ளதால் திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த பின்வரும் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**1. சட்டத் தன்னார்வலரின் தகுதிகள் மற்றும் வயது (Qualification & Age):**

(a) குறைந்தபட்ச கல்வித்தகுதியாக 12ஆம் வகுப்பு (HSC) முடித்திருக்கவேண்டும்.

(b) விண்ணப்பிக்க தகுதியான வயது வரம்பு: 25 முதல் 65 வரையாகும்.

***குறிப்பு:*** *(i)* பட்டதாரிகள், சமூக பணி, உளவியல் மற்றும் சம்பந்தப்பட்ட பிற துறைகளில் தகுதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை (Priority) வழங்கப்படும்.

(ii) விண்ணப்பிக்கும் சட்ட தன்னார்வலர்கள் அரசியல் கட்சியுடன் எவ்வித தொடர்பும் கொண்டிருக்கக் கூடாது.

**2. சட்டத் தன்னார்வலர்களின் பணிக்காலம் (Tenure):**

சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்ப கட்டமாக ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்தப்படுவார்கள். ஒரு குறிப்பிட்ட சட்டத் தன்னார்வலரின் செயல்பாட்டினை பொருத்து மாவட்ட சட்டப்பணி ஆணைக்குழு தலைவரின் (Chairman, District Legal Service Authority, Tirupathur) பரிந்துரையின் அடிப்படையில் பணிக்காலம் நீட்டிக்கப்படலாம்.

**3. சட்டத் தன்னார்வலர்களின் பங்கு (Role):**

- காணாமல் போன குழந்தைகளை மீட்டெடுத்தல்,
- குழந்தைகள் தொடர்பான குற்றங்களின் விசாரணையின்போது உதவுதல்.
- மனரீதியான ஆதரவளித்தல் மற்றும் தகவல்களை சேகரித்தல்.
- காவல்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- மீட்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு பிந்தைய கால ஆதரவளித்தல்.
- குழந்தைகள் நலத்திட்ட உதவிகள் கிடைப்பதற்கு உடனிருந்து வழிவகைகள் செய்தல்

## 3. சட்டத் தன்னார்வலர்களின் பணி (Responsibilities):

திருப்பத்தூர் மாவட்ட அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட காவல் நிலையங்களில் காணாமல் போன குழந்தை (Missing Child) தொடர்பான வழக்கு, அல்லது குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் (Offences against Child) தொடர்பான வழக்கு பதிவாகும் போதெல்லாம் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் (SHO) மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு / சம்பந்தப்பட்ட வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு தகவல் தெரிவிக்கும்பட்சத்தில் புகார்தாரர் அல்லது பாதிக்கப்பட்டவருக்கு வழக்கு தொடர்பான நடவடிக்கையில் சட்டம் சார்ந்த தன்னார்வலர் (PLV) முன்னின்று சேவை புரிதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டத் தன்னார்வலர்கள் ஒவ்வொருவரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (நேர்விற்கேற்ப) இடையே இணைப்பு பாலமாக செயல்பட்டு குழந்தைகள் சம்மந்தப்பட்ட குற்றம் தொடர்பான வழக்கு விவரங்களை சேகரித்து வழக்கு நிலை மற்றும் வழக்கின் முடிவில் எட்டப்பட்ட தீர்வு குறித்து மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் செயலாளரிடம் குறிப்பிட்ட கால இடைவெளியில் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

## சட்டத் தன்னார்வலர்களின் மதிப்பூதியம் (Honorarium):

விண்ணப்பதாரர்களில் தேர்ந்தெடுக்கப்படும் சட்டத் தன்னார்வலரின் பணிக்கு சம்பளமோ, தொகுப்பூதியமோ வழங்கப்படமாட்டாது: மதிப்பூதியம் மட்டுமே வழங்கப்படும். ஒரு சட்டத் தன்னார்வலரின் ஒவ்வொரு வருகைக்கும் ரூ.1000/- வீதம் மதிப்பூதியம் வழங்கப்படும். இருப்பினும் ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5,000/- என்ற உச்ச வரம்பிற்குட்பட்டே மதிப்பூதியம் வழங்கப்படும்.

***குறிப்பு:*** சட்டத் தன்னார்வலர்களின் வருகை பதிவேடானது சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் பராமரிக்கப்படும். சட்டத் தன்னார்வலர்களுக்கான மதிப்பூதியமானது சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணை அதிகாரி சான்றளிப்பதன்பேரில் (Certified by the Investigation Officer) வழங்கப்படும்.

**மேலும் தகவல்களுக்கு:**

1. சட்டத் தன்னார்வலராக பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை திருப்பத்தூர் மாவட்ட நீதிமன்றத்தின் https://tirupathur.dcourts.gov.in/dlsatpt என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து உரிய முறையில் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் தலைவர், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருப்பத்தூர் என்ற அலுவலக முகவரிக்கு பதிவு தபால் மூலம் (Through Registered post) அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. விண்ணப்பத்தின் அடிப்படையில் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியான நபர்கள் சட்டத் தன்னார்வலர்களாக மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவால் தற்காலிக பணியமர்த்தப்படுவார்கள்.

3. நேர்காணல் தேதி, நேரம், இடம், நேர்காணலுக்கு தகுதியான (short listed) விண்ணப்பதாரர்கள், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம், நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படும் தன்னார்வலர்கள் பற்றிய விவரங்கள் அனைத்தும் https://tirupathur.dcourts.gov.in/dlsatpt என்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

4. சட்டத் தன்னார்வலர் பணிக்கு மதிப்பூதியத்தை தவிர வேறு எந்த சலுகைகளோ அல்லது ஊதியமோ இல்லை. தன்னார்வலர்களின் பணியானது சேவையாக மட்டுமே கருதப்படும்: அதனை நிரந்தர பணி என கருத இயலாது.

5. சட்ட தன்னார்வலர்கள் சம்மந்தப்பட்ட தேசிய சட்ட பணிகள் ஆணைக்குழுவால் வரையறுக்கப்பட்ட திட்டம் பற்றி அறிய இணையதளத்தில் பின்வரும் லிங்கை கிளிக் செய்யவும் https://tirupathur.dcourts.gov.in/dlsatpt அத்துடன் திருப்பத்தூர் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை நேரில் அணுகி தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| ஓம் /- ஜெ. நாகலக்ஷ்மி @ விஜயராணி, | ஓம் /- வீ. தேன்மோழி, |
| செயலாளர்/ சார்பு நீதிபதி, | தலைவர்/மாவட்ட நீதிபதி, |
| மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, |
| திருப்பத்தூர். | திருப்பத்தூர். |

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருப்பத்தூர்

## சட்ட தன்னார்வலராக விண்ணப்பிப்தற்கான அறிவுரைகள்

**1.** மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம் தொகுப்பூதியம் மற்றும் தினக் கூலி ஏதும் இல்லை.

**2.** மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும், நிரந்தர பணியென கருத இயலாது.

**3.** மேற்கண்ட பணிக்கு விண்ணபப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணபப்பங்களை திருப்பத்தூர் நீதிமன்றத்தின் இணையதளமான https://tirupathur.dcourts.gov.in/dlsatpt என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, விண்ணபப்பத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் பதிவுத்தபால் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. விண்ணபப்பிக்க வேண்டிய முகவரி தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருப்பத்தூர் – **635 601.**

5. விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 04.05.2026 மாலை 05.30 மணி. அதற்குப் பின்னிட்டு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணபப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பிறந்த தேதி மற்றும் வயதிற்கான சான்றிதழ் | பிறப்பு சான்றிதழ் S.S.L.C / H.S.C சான்றிதழ் |

| | | |
|---|---|---|
| 2 | ஜாதி  சான்றிதழ் | தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட  ஜாதி சான்றிதழ் |
| 3 | கல்வித் தகுதி | H.S.C / Degree / Diploma சான்றிதழ்கள் |
| 4 | இதர கல்வித் தகுதி | ஏதேனும் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள் |
| 5 | நிரந்தர முகவரிக்கான சான்று | வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, குடும்ப அட்டை, பாஸ்போர்ட் இவற்றில் ஏதேனும் ஒன்று |
| 6 | அனுபவ சான்றிதழ்கள் | ஏதேனும் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள் |

7. மேலும் விவரங்களுக்கு திருப்பத்தூர் மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் வட்ட சட்டப்பணிகள் குழுக்களை நேரில் அணுகலாம் அல்லது https://tirupathur.dcourts.gov.in/dlsatpt என்ற திருப்பத்தூர் நீதிமன்ற இணையதளத்தையும் பின்பற்றலாம்

ஓம் /- ஜெ. நாகலக்ஷ்மி @ விஜயராணி,
செயலாளர்/ சார்பு நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருப்பத்தூர்.

ஓம் /- வீ. தேன்மோழி,
தலைவர்/மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருப்பத்தூர்.

# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருப்பத்தூர்

## சட்ட தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்படிவம்

புகைப்படம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தந்தை / கணவர் பெயர் | : | |
| 3 | பாலினம் | : | ஆண் / பெண் |
| 4 | பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழை இணைக்கவும்) | : | |
| 5 | கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்) | : | |
| 6. | சாதி (சான்றிதழை இணைக்கவும்) | : | |
| | இனம் | : | |
| | மதம் | : | |
| | தாய்மொழி | : | |
| 7. | நிரந்தர முகவரி | : | |
| | தொலைபேசி எண் | : | |
| | மின்னஞ்சல் முகவரி | : | |
| 8 | இதற்கு முன் சட்டத்தன்னார்வ பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா ? | : | ஆம் / இல்லை |
| | ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | | |

| | | | |
|---|---|---|---|
| 9 | திருமண நிலை | : | |
| 10 | காவல் துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால் ? அதன் விவரம் | : | |
| 11 | தாங்கள் எந்தப்பகுதியில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (டிக் செய்யவும்) | : | திருப்பத்தூர்<br>ஆம்பூர்<br>வாணியம்பாடி |

12. கீழ்கண்ட எந்த பிரிவின்கீழ் விண்ணப்பிக்கிறீர்கள் (அதற்கான சான்றிதழை இணைக்கவும்)

| வ.எண் | பிரிவுகள் | விண்ணப்பிக்கும் பிரிவு |
|---|---|---|
| 1 | ஆசிரியர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட) | |
| 2 | ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் | |
| 3 | உளவியலாளர் (மனோதத்துவ நிபுணர்) | |
| 4 | MSW Students & Teacher – பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் | |
| 5 | அங்கன்வாடி பணியாளர்கள் | |
| 6 | மருத்துவர்கள் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சட்ட மாணவர்கள் | |
| 7 | அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்க பிரமுகர்கள் | |

## உறுதிமொழி

நான் மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன்பேரில் சட்டத் தன்னார்வலர் பணிக்கு தற்காலிக பணி அமர்த்தப்படும் நிலையில், மதிப்பூதியத்தை தவிர வேறு எந்த சலுகைகளோ அல்லது ஊதியமோ இல்லை. தன்னார்வலர்களின் பணியானது சேவையாக மட்டுமே கருதப்படும்: அதனை நிரந்தர பணி என கருத இயலாது என்பதை நான் அறிவேன் என உறுதியளிக்கிறேன்.

நாள் : விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம் :